**தேதி :** 24.11.2025 **SC.No. :** 393/2023 **PW :4** மாரியம்மாள்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி 2 முத்துக்குமார் என்னுடைய அக்கா மகன். சாட்சி சரவணன் என்னுடைய கொழுந்தனார். எனக்கு காலை 08.30 மணியளவில் என்னுடைய கணவரை தாக்கியதாக தகவல் கிடைத்தது. எத்தனை நேரத்தில் வந்தேன் என்றால் என்னால் தற்போது சொல்ல முடியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் பஸ்ஸ்டாண்ட், காவல்நிலையம் உள்ளது என்றால் கொஞ்சம் தள்ளி உள்ளது. அந்த இடம் நாலு முக்கு சந்து என்றால் சரிதான். பஸ் போக்குவரத்து, மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். மெயின் ரோட்டிலிருந்து 10 அடி தாண்டி கோவில் உள்ளது என்றால் சரிதான்.

நான் ஆய்க்குடி அரசு மருத்துவமனைக்கு செல்லும் போது, என் கணவர் பேசினார். பஞ்சு வைத்து காயத்தில் கட்டியிருந்தார்கள். என் கணவருடன் முத்துக்குமாரும், சரவணனும் இருந்தார்களா? என்றால் நான் அவர்களை பார்க்கவில்லை. அங்கிருக்கும் போது, ஆய்க்குடி போலீசார் வந்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். தென்காசி அரசு மருத்துவமனைக்கு நாங்கள் அழைத்து சென்ற போது, அங்கு சிகிச்சை செய்யவில்லை, அதனால் தனியார் மருத்துவமனைக்கு சென்றோம். என்னுடைய கணவர் எப்போதாவது மயக்கமடைந்தாரா? என்றால் தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்ய ஸ்கேன் எடுக்க கொண்டு சென்றபோது, மயக்கமடைந்தார். பின்னர், நெஞ்சுபகுதியிலிருந்து வயிற்று பகுதி வரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. என்னுடைய கணவரை ஸ்கேன் செய்ய

எங்கு கொண்டு சென்றார்கள் என்றால் ஆர்த்தி ஸ்கேனுக்கு கொண்டு சென்றார்கள். சம்பவத்திற்கு முன்பு எதிரி மீது என்னுடைய கணவரோ, கணவரின் சகோதரியோ புகார் கொடுத்துள்ளார்களா? என்றால் இல்லை.

சம்பவகாலகட்டத்தில் எதிரிக்கு 70 வயதிருக்கும் என்றால் சரிதான். என்னுடைய கணவருக்கு சம்பவ காலக்கட்டத்தில் 53 வயதிருக்கும். நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் கேள்விபட்டதாக சொல்வதெல்லாம் பொய் என்றாலும், என் கணவருக்கு எதிரி கொடுத்த பணத்தை திரும்ப கேட்டதினால் அதனை மனதில் வைத்து கணவர் கொடுத்த பொய் புகாருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பட்ட பகலில் காவல்நிலையம் முன்பு, மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியில் பல வருடம் பகையுள்ள 70 வயதுடைய எதிரி தாக்கியதாக சொல்வது நம்பக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எதிரி எங்கள் ஊருக்கு அடிக்கடி வந்து செல்வார் என்றால் சரிதான். எங்கள் ஊரில் டீக்கடை, பலசரக்கு கடை என்று அனைத்து கடைகளும் உண்டு என்றால் சரிதான்.

நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எதிரி எனது கணவரை தாக்கியதாக சொல்வது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், எனது கணவருக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. புகார் மனுவில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சாட்சிகள் முத்துக்குமாரும், சரவணனும் சம்பவயிடத்தில் கிடையாது என்றாலும், அவர்கள் தகவல் சொன்னதாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.25 13:37:54 +0530

**தேதி :** 24.11.2025 **SC.No. :** 393/2023 PW **:5** பிரேமா

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் பயோமெடிக்கல் இன்ஜினியரிங் படித்துள்ளேன். நான் சம்பவத்தை 08.30 – 08.45 மணி அளவில் கேள்விபட்டேன். நான் சம்பவத்தை கேள்விபட்டு ஆட்டோவில் என் அம்மாவுடன் 09.00 மணியளவில் ஆய்க்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அதன் பிறகு போலீசார் என்னிடம் ஆய்க்குடி அரசு மருத்துவமனையில் வைத்து கேட்டார்கள். நான் ஆய்க்குடி காவல்நிலையத்திற்கு செல்லவில்லை. எவ்வளவு நேரம் கழித்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் நேரம் என்னால் தற்போது சொல்ல முடியாது. தென்காசி அரசு மருத்துவமனையில் அரை மணி நேரம் இருந்தோம். ஆனால், மருத்துவர்கள் எவரும் வந்து என் அப்பாவை பார்க்கவில்லை. என்னுடைய அப்பாவிற்கு மூச்சு திணறல் வந்ததினால், உடனே நாங்கள் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். தென்காசி மெடிக்கல் சென்டர் தனியார் மருத்துவமனைக்கு செல்லும்போது, 12.00 மணியிருக்குமா? என்றால் இருக்கும். அப்போது எனது அப்பா பேசிக்கொண்டிருந்தார், பின்னர் ஆர்த்தி ஸ்கேனில் எடுக்க கொண்டு சென்று பின்னர் அறுவை சிகிச்சைக்கு செல்லும் போது, சாயங்காலம் 03.00, 03.30 மணியளவில் எனது அப்பா மயக்கமானார்.

ஆய்க்குடி அரசு மருத்துவமனையிலும், தென்காசி மெடிக்கல் சென்டரிலும் போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். தென்காசி மெடிக்கல் சென்டரில்

என் அப்பாவை சேர்த்த அன்றைய தினம் விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் தற்போது சொன்ன மாதிரி தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன்.

நான் சம்பவத்தை கேள்விபட்டு வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரி என் அப்பாவிடம் பணம் கொடுத்தார் என்றாலும், அதனை திருப்பி கேட்டதினால் எதிரிக்கு எதிராக பொய் வழக்கு கொடுத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எனது அப்பா எதிரியால் தாக்கபடவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எதிரி எனது அப்பாவை தாக்கியதாக சொல்வது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், எனது அப்பாவுக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. புகார் மனுவில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சாட்சிகள் முத்துக்குமாரும், சரவணனும் சம்பவயிடத்தில் கிடையாது என்றாலும், அவர்கள் தகவல் சொன்னதாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.25 13:38:02 +0530

**தேதி :** 24.11.2025 **SC.No. :** 393/2023 PW :6 மாடசாமி

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி நெல்லையப்பன் எனக்கு அண்ணன் முறை. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடம் நான்கு ரோடுகள் சந்திக்கின்ற இடம் என்றால் சரிதான். மெயின் ரோட்டிலிருந்து 15 அடி தாண்டி சம்பவயிடம் இருக்குமா? என்றால் ரோட்டின் பக்கத்தில் தான் சம்பவயிடம் உள்ளது. காவல்நிலையம் சம்பவயிடத்திலிருந்து 30 அடி தூரம் இருக்கும். 2 புறங்களிலும் ரோடு உள்ளது. ரோட்டை ஒட்டியே பஸ்ஸ்டாண்ட் உள்ளது என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியும். சம்பவம் நடந்த இடத்தை குறித்து எழுதியிருந்தார்கள். சம்பவயிடத்தின் அருகே பாலமுருகன் டீக்கடை இருந்ததாக எழுதப்பட்டிருந்ததா? என்றால் டீக்கடை இருந்தது, அது பாலமுருகன் டீக்கடையா? என்று எனக்கு தெரியாது. சம்பவயிடத்திற்கு அருகில் இருபுறங்களிலும் நிறைய கடைகள் இருந்தன என்றால் சரிதான். டீக்கடை சம்பவயிடத்திலிருந்து 3 வது, 4 வது கடையாக இருந்தது. நான் சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றாலும, அ.சா.1 எனது சகோதரர் என்பதினால் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையெழுத்து போட்டபோது, அந்த இடத்தில் நிறைய மக்கள் இருந்தார்கள் என்றால் சரிதான்.

காவல்நிலையத்தில் வைத்து நான் கையெழுத்து செய்து விட்டு, அ.சா.1 எனது அண்ணன் என்பதினால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும், எங்கள் முன்பு

பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.25 13:38:10 +0530